# ஆசிட் பாதிப்புக்குள்ளான தான்சானியா நோயாளிக்கு சென்னையில் மறுவாழ்வு




ஆசிட் பாதிப்புக்கு நவீன சிகிச்சை பெற்று தான்சானியாவைச் சேர்ந்த முகமது ஓமர் சயீத்துடன் (நடுவில்), டாக்டர் ஈப்பன் கோஷி, மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ்.

சென்னை, ஜூலை 6: ஆசிட் வீச்சு காரணமாக பாதிப்புக்குள்ளான தான்சானியா நாட்டின் ஜான்ஸிபார் பகுதியைச் சேர்ந்த நோயாளிக்கு சென்னை மியாட் மருத்துவமனை மருத்துவர்கள் வெற்றிகரமாக சிகிச்சை அளித்துள்ளனர்.

இது தொடர்பாக மியாட் மருத்துவமனையின் முக சீரமைப்பு மற்றும் அழகு சிகிச்சை நிபுணர் ஈப்பன் கோஷி கூறியதாவது:

தான்சானியா நாட்டின் ஒரு பகுதியான ஜான்சிபாரைச் சேர்ந்தவர் அரசியல் பிரிவு தலைவரான எம்.முகமது ஓமர் சயீத் (59). அரசியல் விரோதம் காரணமாக கடந்த மே 22-ஆம் தேதி சமூக விரோதிகள் சிலர் ஆசிட் இவரது முகத்தின் வலது ஓரம் வீசினர். இதனால் பாதிக்கப்பட்ட முகமது ஓமர் சயீத் முதலில் அங்குள்ள காவல் நிலையத்துக்கு ஓடினார். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

தொடர்ந்து அந்த நாட்டு மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்றார். எனினும் ஆசிட் பாதிப்பின் தன்மை குறையவில்லை. மேலும் பக்க விளைவாக மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டார்.

இதையடுத்து கடந்த ஜூன் 22-ஆம் தேதி மியாட் மருத்துவமனைக்கு அந்த நாட்டு மருத்துவருடன் முகமது ஓமர் சயீத் சிகிச்சை பெற வந்தார். மியாட் மருத்துவமனையில் நவீன உபகரணங்களைக் கொண்டு தோல் மாற்று சிகிச்சை செய்யப்பட்டது. ஆசிட் பாதிப்புக்குள்ளான இடத்தில் தோல் சுருங்காமல் இருக்கும் வகையில் வலை வடிவமைப்புடன் கூடிய (மெஷ்) தோல் மாற்று சிகிச்சை செய்யப்பட்டது. ஆசிட் வீச்சில் பாதிக்கப்பட்ட காதின் மடலும் சரி செய்யப்பட்டது. மொத்தம் 15 நாள் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து பாதிக்கப்பட்ட பகுதி முற்றிலும் சரியாகி, முகமது ஓமர் சயீத் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 7) நாடு திரும்புகிறார் என்றார் டாக்டர் ஈப்பன் கோஷி.